# BSNL - அன்றும் இன்றும் என்றும் மக்களுக்காகவே

அன்பார்ந்த பொதுமக்களே,

இந்திய நாட்டின் அரசுத்துறை நிறுவனமாக ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேல் இந்திய நாட்டு மக்களுக்கு சேவை செய்து, கடந்த பதினைந்து ஆண்டு காலமாக இந்திய அரசாங்கத்தின் பொதுத்துறை நிறுவனமாக BSNL என்று பெயர் மாறி சேவை செய்து கொண்டு வருகின்றோம்.

## சென்னை பெரு வெள்ளத்தில் BSNL:-

சமீபத்தில் தமிழகமே பதைபதைத்த சென்னை வெள்ளத்தின் போது சென்னை நகர மக்கள் பட்ட வேதனை ஏராளம். ஏராளம். அந்த வேதனையின் ரணங்கள் ஆற இன்னமும் பல ஆண்டு காலம் ஆகும். அந்த வெள்ளம் ஏற்பட்டபோது அவர்களுக்கு வீட்டை விட்டு நகர முடியாத நிலை. சென்னையை விட்டு வெளியே செல்ல முடியாத நிலை. ஆண்களும், பெண்களுமாய் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து IT துறை உள்ளிட்ட பல இடங்களில் பணியாற்ற வந்த லட்சக்கணக்கானவர்களின் குடும்பங்களும், தங்களின் குழந்தைகளின் நிலை என்ன என தெரியாத பரிதவிப்பு. சென்னையில் உள்ளவர்களும் தங்கள் ஊருக்கு தகவல் சொல்ல முடியாத நிலை. சென்னை நகர மக்கள் அன்று நரக வேதனைப்பட்டுக் கொண்டிருந்த போது அவர்களுக்கு ஆறுதல் தரவும், ஆதரவு தரவும் சாதி மத பேதமின்றி பலரும் போட்டி போட்டு வந்தனர். அந்த சமயத்தில் நஷ்டத்தைப் பற்றியும், கஷ்டத்தை பற்றியும் கவலைப் படாமல் மக்களுக்கு தொலை தொடர்பு சேவையை முழுமையாக கொடுத்த ஒரே நிறுவனம் BSNL மட்டுமே என்பதால் எங்களுக்கு மிகப் பெரிய பெருமிதம் உண்டு. இது நாங்கள் சொல்லும் தற்புகழ்ச்சி அல்ல. இணையதளங்களும், பத்திரிக்கைகளும், சமூக ஆர்வலர்களும் துல்லியமாக உணர்ந்து சொன்ன வார்த்தைகள்.

சென்னையில் உள்ள 9 தனியார் தொலைதொடர்பு நிறுவனங்களின் சேவைகளெல்லாம் வெள்ள காலத்தில் தேய்ந்து காணாமல் போன நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாய், அவர்களின் அபயக் குரலை வெளிக் கொணர்வதற்கும், அவர்களுக்கு வந்து கொண்டிருந்த ஆறுதல்களையும் நம்பிக்கைகளையும் கொண்டு சென்றது BSNL என்கிற பொதுத்துறை நிறுவனம் தான். டிசம்பர் முதல் வாரத்தில், தங்குதடையற்ற மொபைல் சேவை வழங்குவதற்கான டவர்கள் இயங்குவதற்குத் தேவையான மின்சார வசதியை வழங்க இருபத்து நான்கு மணி நேரமும் ஜெனரேட்டர்கள் இயக்குவதற்கு BSNL செலவழித்த பணம் மூன்று நாட்களில் மட்டும் 22 லட்சம் ரூபாய்.

அது மட்டுமல்லாமல், இயற்கை பேரழிவால் பாதிக்கப்பட்டிருந்த சென்னையில் இருக்கும் BSNL சந்தாதாரர்களின் தொலைபேசி அழைப்புகளுக்கும், SMSகளுக்கும், DATA பயன்பாட்டிற்கும் 02.12.2015 முதல் 7 நாட்களுக்கு கட்டணம் இல்லை என்று அறிவித்தது பொதுத்துறை நிறுவனமான BSNL மட்டுமே.

அரசாங்கத்தின் சமூக கடமைகளை நிறைவேற்றுவதும், இடர்படும் மக்களுக்கு துணையாக என்றும் நிற்பதும் பொதுத்துறை நிறுவனமான BSNL மட்டுமே என்பதற்கு சென்னை பெருவெள்ளம் மட்டுமல்ல. ஆந்திர மாநிலத்தில் வெள்ள சேதம் ஏற்பட்ட போதும், உத்தரகாண்டில் நிலச்சரிவு ஏற்பட்ட போதும் இன்னமும் பல இயற்கை பேரிடர்களின் போதும் என்றும் சேவை தந்தது BSNL மட்டுமே என்பது வரலாறு.

இத்தகைய பெருமை மிகு BSNL நிறுவனம் தற்போது வாடிக்கையாளர்களுக்கு எந்த தொலைதொடர்பு நிறுவனமும் தராத பல்வேறு சலுகைகளை தற்போது அறிவித்துள்ளது. BSNLன் தரைவழி தொலைபேசி இணைப்புகளில் (LAND LINE) இருந்து இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் உள்ள எந்த ஒரு நெட்வர்க்கில்

உள்ள தொலைபேசிகளுக்கும் தொடர்பு கொண்டு பேசிட கட்டணம் ஏதும் கிடையாது. முற்றிலும் இலவசம். ப்ராட்பேண்ட் இணைப்புகளுக்கு இதுவரை 512 KBPS வேகம் தான் இருந்தது. அந்த வேகத்தை நான்கு மடங்கு உயர்த்தி தற்போது ப்ராட் பேண்ட் இணைப்புகளின் வேகம் 2 MBPS என்று அதிகரித்துள்ளது BSNL மட்டுமே. மொபைல் தொலை பேசிகளை வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்லும் போது அதற்கு வருகின்ற INCOMING கால்களுக்கும் கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால் தற்போது BSNL நிறுவனம் மட்டும் ரோமிங்கின் போது வருகின்ற அந்த INCOMING கால்களுக்கு கட்டணம் ஏதுமில்லை என்று கூறியுள்ளது. அது மட்டுமல்லாமல் புதியதாக வாங்கப்படும் Prepaid இணைப்புகளுக்கும், இதர தொலைபேசி நிறுவனங்களிடமிருந்து BSNL சேவைக்கு தங்களின் மொபைல் தொலைபேசி இணைப்பை மாற்றிக் கொள்பவர்களுக்கும் (MNP) முதல் இரண்டு மாதங்களுக்கு கட்டணத்தில் 80% தள்ளுபடியை கொடுத்துள்ளது.

எனவே இன்றைக்கு மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான BSNLன் சேவைகள் மிக பிரமாண்டமாக வளர்ந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கிவந்த இந்த நிறுவனம் கடந்த ஆண்டு OPERATIONAL PROFIT ஆக 672 கோடி ரூபாய்களை பெற்றுள்ளது. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை உயர்வதற்கு ஏற்றபடி மொபைல் டவர்களையும் உயர்த்த வேண்டும் என்கின்ற நோக்கத்தின் அடிப்படையில், பிப்ரவரி இறுதிக்குள் 600 டவர்களை தமிழகம் முழுவதும் நிர்மாணிக்க BSNL நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக 350 டவர்கள் நிர்மாணிப்பதற்கு தேவையான சாதனங்கள் சென்னைக்கு வந்துள்ளன. நிர்மாணப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

எனவே பொது மக்களுக்கு சொந்தமான, இடர்படும் காலங்களில் உற்ற தோழனாக விளங்குகின்ற, குறைந்த கட்டணத்தில் மிகச் சிறந்த சேவைகளைத் தருகின்ற பொதுத்துறை நிறுவனமான BSNL நிறுவனத்தின் இணைப்புகளை இன்றே பெற்றிடுவீர்! சிறப்பான சேவைகளை பெற்றிடுவீர்!

தனியார் நிறுவன தொலைபேசி நிறுவனங்களுக்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் என்பது ஒரு தனிப்பட்ட முதலாளியின் பாக்கெட்டுக்குள் செல்லும். ஆனால் பொதுத்துறை நிறுவனமான BSNL க்கு நீங்கள் செலுத்தும் கட்டணங்கள் யாவும் இந்திய அரசாங்கத்திற்கு செல்லும். அதன்மூலம் இந்திய நாட்டு மக்களுக்கே போய் சேரும்.

வாடிக்கையாளர்களாகிய தாங்கள் அணுகும்போதெல்லாம் இன்முக சேவை என்பதை நெறியாக கொண்டு செயல்படும் BSNL சேவைகளை தங்கள் உற்றார்- உறவினர்- ஊரினர் என அனைவருக்கும் எடுத்துச் சொல்லி எங்கள் சேவை முன்னிலும் சிறக்க உதவிட எங்கள் கரம்கூப்பி வேண்டுகோள் விடுக்கிறோம்.

குறைவானகட்டணம்! மக்களுக்கு மன நிறைவான சேவை!! என்பதே BSNLன் லட்சியம். ஆதரிப்பீர் BSNL சேவைகளை!

**(Forum த்தின் சார்பாக 8.1.2016 அன்று நடைபெற உள்ள ஜாதாவின் போது பொது மக்களுக்கு விநியோகிக்க வேண்டிய நோட்டீஸின் மாதிரி)**